செயற்பொறியாளர், பொபது. திட்டம் & வடிவமைப்பு கோட்ட அலுவலகம், காரைக்குடி.

முன்னிலை: திரு.க.பொன்ராஜ், பி.இ.,
செயற்பொறியாளர், பொபது.

கோ.செ.மு.க.எண்.பஎ2 /322/2019/நாள்: 15.04.2019.

பொருள்: நியமனம் (நேரடி) த.நா.அமைச்சுப்பணி தொகுதி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018ல் நடத்தப்பெற்ற போட்டித் தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய பணிகளுக்கானது – இளநிலைஉதவியாளர்கள் பதவிக்கு தெரிவு செய்து பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிவேட்பாளர்கள் - திரு.KR.பாலகிருஷ்ணன் மற்றும் செல்வி.M.கவிதா இளநிலைஉதவியாளர்கள் இக்கோட்ட கட்டுப்பாட்டின் கீழ் 08.03.2019 பிற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளமை – அவர்தம் பதவியில் பணிவரன்முறை செய்துதகுதிகாண் பருவம் துவங்குதல் - ஆணை.

பார்வை:

1) சென்னை-3, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் செயலாளர் அவர்களின் கடித எண். 1/50/PSD-H2/2019/நாள் 18.02.2019
2) முதன்மை தலைமை பொறியாளர் (நீர்வள ஆதாரத்துறை), மற்றும் தலைமை பொறியாளர் (பொது) அவர்களின் செ.மு. எண், எஸ்.3(3)/25366/2019/ நாள் 25.02.2019
3) தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்).அவர்களின் செமுஎண் எஸ்1(2)/0772/2019/ நாள் 08.03.2019
4) திருச்சிராப்பள்ளி பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்துறை திட்ட உருவாக்க வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் செ.மு.எண் 695-4/2019/நிஉ/நாள் 08.03.2019
5) இவ்வலுவலக செ.மு.எண்.பஎ2/322/2019(323)/நாள் 08.03.2019
6) இவ்வலுவலக செ.மு.எண் பஎ2/323/2019(323)/நாள் 08.03.2019

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2015-16,2016-2017 மற்றும் 2017-2018ம் ஆண்டில் நடத்தப்பெற்ற போட்டித்தேர்வில் (தொகுதி-IVற்கானது) தேர்ச்சிபெற்று இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட திரு. KR.பாலகிருஷ்ணன் மற்றும் செல்வி.M.கவிதா ஆகியோர் பார்வையில் காணும் செயல்முறை ஆணைகளின் அடிப்படையில், இக்கோட்டக்கட்டுப்பாட்டின் கீழ் 08.03.2019 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்ததை தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம்14/2016)ன் பிரிவு 28ன் படி இவர்களின் பணி இளநிலை உதவியாளர் பதவியில் 08.03.2019 பிற்பகல் முதல் வரன்முறை செய்து இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது. இதன்தொடர்ச்சியாக இவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் துவக்கப்படுகிறது. இவர்கள் இளநிலை உதவியாளர் பதவியில் தமது மூன்றாண்டுகால தொடர்பணியில் தமது இரண்டாண்டு கால பணியினை திருப்திகரமாக நிறைவு செய்தல் வேண்டும். மேலும் இத்தகுதிகாண் பருவ காலத்தில் இவர்கள் பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பெறும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்

மேற்கண்ட பணிவரன்முறை ஆணையானது, சென்னை உயர்நீதிமன்றம் சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் ஒருங்கிணைந்த குடிமை பணிகளுக்கான தேர்வு தொகுதி IVன் நியமனம் தொடர்பாக தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளில் நீதிமன்றம் வழங்கவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் மேற்கண்ட பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

செயற்பொறியாளர், பொபது.நீ.ஆ.து
திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம்,
காரைக்குடி.

பெறுநர்:

1. திரு. KR.பாலகிருஷ்ணன்
   இளநிலை உதவியாளர், பொபது.,நீ.ஆ.து.,
   திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்ட அலுவலகம்
   காரைக்குடி.
2. செல்வி.M.கவிதா
   இளநிலை உதவியாளர், பொபது.,நீ.ஆ.து.,
   திட்டம் மற்றும் வடிவமைப்பு உபகோட்டம்
   சிவகங்கை.

வழி: உதவி செயற்பொறியாளர்/திட்டம் மற்றும் வடிவமைப்பு உபகோட்டம்/சிவகங்கை மூலமாக